சுருக்கம்

வேளாண்மை – 100 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம், 100 வருவாய் கிராமங்களில் மண்வள அட்டை அடிப்படையில் விவசாயிகள் உரங்களை வாங்கி பயன்படுத்தும் திட்டம் 2018–2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்துதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.உ.4) துறை

அரசாணை (நிலை) எண்.187

நாள்: 18 .07.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049,
ஆடி–2

படிக்கப்பட்டவை:

வேளாண்மை இயக்குநரின் கடித எண்.ஆகூபி2/38883/2018, நாள் 22.6.2018.

*******

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்கள் 2018–19ம் ஆண்டின் வேளாண்மைத் துறை மானிய கோரிக்கையின்போது, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 12.6.2018 அன்று மண்வளம் அறிந்து உரமிட உதவும் மண்வள அட்டை அடிப்படையிலான உரவிநியோகம் தொடர்பாக பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

அறிவிப்பு எண்.15

"மண் வளமறிந்து அதற்கேற்ப உரமிடும் முறையினை தமிழக விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக, அளவிற்கு அதிகமான இரசாயன உரங்கள் பயன்பாட்டினைத் தவிர்க்கவும், மண்வளம் பாதுகாத்து, உரச்செலவைக் குறைக்கவும் 100 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம், 100 வருவாய் கிராமங்களில் மண்வள அட்டை அடிப்படையில் விவசாயிகள் உரங்களை வாங்கி பயன்படுத்தும் திட்டம், சோதனை அடிப்படையில் 2018–2019 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டம் தமிழகத்தின் அனைத்து கிராமங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கப்படும்".

2. இது தொடர்பாக, வேளாண்மை இயக்குநர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், அளவிற்கு அதிகமான இரசாயன உரங்கள் பயன்பாட்டினைத் தவிர்க்கவும், மண்வளம் பாதுகாத்து, உரச்செலவைக் குறைக்கவும் 100 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம், 100 வருவாய் கிராமங்களில் மண்வள அட்டை அடிப்படையில் விவசாயிகள் உரங்களை வாங்கி பயன்படுத்தும் திட்டம், சோதனை அடிப்படையில் நடப்பாண்டில் அறிமுகப்படுத்துவதற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், இத்திட்டத்திற்கான செலவினத்தை தற்போது நடைமுறையில் உள்ள தேசிய நீடித்த வேளாண்மை இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மண்வள அட்டை திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

3. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, பரிசீலனைக்குப்பின் அளவிற்கு அதிகமான இரசாயன உரங்கள் பயன்பாட்டினைத் தவிர்க்கவும், மண்வளம் பாதுகாத்து, உரச்செலவைக் குறைக்கவும் பின்வரும் 100 வட்டாரங்களில்,

[த.பி.பா]

வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம், 100 வருவாய் கிராமங்களில் மண்வள அட்டை அடிப்படையில் விவசாயிகள் உரங்களை வாங்கி பயன்படுத்தும் திட்டத்தினை, சோதனை அடிப்படையில் 2018–2019 ம் ஆண்டில் அறிமுகப்படுத்தலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணை வெளியிடுகிறது:–

**மண் வளம் அறிந்து உரமிட உதவும் மண்வள அட்டை அடிப்படையிலான உர விநியோகம் 2018–2019 ஆம் ஆண்டில் 100 வட்டாரங்களில் சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இடங்கள் விபரம்**

| வ. எண். | மாவட்டம் | வட்டாரம் | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | 3 |
| | | வாலாஜாபாத் | |
| | | சிட்லபாக்கம் | |
| 2 | திருவள்ளூர் | திருவள்ளூர் | 3 |
| | | கடம்பத்தூர் | |
| | | எல்லாபுரம் | |
| 3 | கடலூர் | கடலூர் | 5 |
| | | அண்ணாகிராமம் | |
| | | காட்டுமன்னார் கோயில் | |
| | | மங்களூர் | |
| | | நல்லூர் | |
| 4 | விழுப்புரம் | கோலியனூர் | 5 |
| | | கணை | |
| | | மேல்மலையனூர் | |
| | | ஒலக்கூர் | |
| | | மரக்காணம் | |
| 5 | வேலூர் | வேலூர் | 3 |
| | | குடியாத்தம் | |
| | | ஆற்காடு | |
| 6 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 3 |
| | | மேற்கு ஆரணி | |
| | | அனக்காவூர் | |
| 7 | சேலம் | அயோத்தியாபட்டினம் | 3 |
| | | எடப்பாடி | |
| | | மேச்சேரி | |
| 8 | நாமக்கல் | சேந்தமங்கலம் | 3 |
| | | எருமைப்பட்டி | |
| | | பள்ளிப்பாளையம் | |

| | | | |
|---|---|---|---|
| 9 | தருமபுரி | தருமபுரி | 3 |
| | | நல்லம்பள்ளி | |
| | | காரிமங்கலம் | |
| 10 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 3 |
| | | கிருஷ்ணகிரி | |
| | | பர்கூர் | |
| 11 | கோயம்புத்தூர் | சூலூர் | 3 |
| | | காரமடை | |
| | | பொள்ளாச்சி (தெற்கு) | |
| 12 | திருப்பூர் | குடிமங்கலம் | 4 |
| | | உடுமலைப்பேட்டை | |
| | | திருப்பூர் | |
| | | ஊத்துக்குளி | |
| 13 | ஈரோடு | ஈரோடு | 3 |
| | | கோபிச்செட்டிபாளையம் | |
| | | பெருந்துறை | |
| 14 | திருச்சி | மணிகண்டம் | 3 |
| | | வையம்பட்டி | |
| | | உப்பிலியாபுரம் | |
| 15 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 3 |
| | | ஆலத்தூர் | |
| | | வேப்பந்தட்டை | |
| 16 | அரியலூர் | செந்துறை | 3 |
| | | திருமானூர் | |
| | | ஜெயங்கொண்டம் | |
| 17 | கரூர் | கரூர் | 3 |
| | | கே.பரமத்தி | |
| | | குளித்தலை | |
| 18 | புதுக்கோட்டை | அன்னவாசல் | 3 |
| | | கறம்பக்குடி | |
| | | அரிமளம் | |
| 19 | தஞ்சாவூர் | மதுக்கூர் | 3 |
| | | பாபநாசம் | |
| | | திருவிடைமருதூர் | |
| 20 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 3 |
| | | திருமருகல் | |
| | | சீர்காழி | |

| | | | |
|---|---|---|---|
| 21 | திருவாரூர் | கொரடச்சேரி | 5 |
| | | திருவாரூர் | |
| | | மன்னார்குடி | |
| | | நன்னிலம் | |
| | | வலங்கைமான் | |
| 22 | மதுரை | மதுரை மேற்கு | 3 |
| | | வாடிப்பட்டி | |
| | | கள்ளிக்குடி | |
| 23 | தேனி | கம்பம் | 3 |
| | | சின்னமனூர் | |
| | | உத்தமப்பாளையம் | |
| 24 | திண்டுக்கல் | ஆத்தூர் | 3 |
| | | பழநி | |
| | | வேடசந்தூர் | |
| 25 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 3 |
| | | திருப்புல்லானி | |
| | | நயினார்கோயில் | |
| 26 | சிவகங்கை | சிவகங்கை | 3 |
| | | கல்லல் | |
| | | சிங்கம்புணரி | |
| 27 | விருதுநகர் | சிவகாசி | 3 |
| | | ஸ்ரீவில்லிப்புத்தூர் | |
| | | அருப்புக்கோட்டை | |
| 28 | திருநெல்வேலி | நாங்குநேரி | 3 |
| | | சேரன்மாதேவி | |
| | | பாளையங்கோட்டை | |
| 29 | தூத்துக்குடி | கோவில்பட்டி | 3 |
| | | விளாத்திக்குளம் | |
| | | புதூர் | |
| 30 | கன்னியாகுமரி | தோவாளை | 3 |
| | | அகத்தீஸ்வரம் | |
| | | கிள்ளியூர் | |
| 31 | உதகமண்டலம் | உதகமண்டலம் | 3 |
| | | குன்னூர் | |
| | | கோத்தகிரி | |
| | மொத்தம் | | 100 |

4. இத்திட்டத்திற்கான செலவினத்தை தற்போது நடைமுறையில் உள்ள தேசிய நீடித்த வேளாண்மை இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மண்வள அட்டை திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள வேளாண்மை இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

வேளாண்மை இயக்குநர், சென்னை–5.
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை–18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை–9.

<u>நகல்:–</u>

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
வேளாண்மை (பொது/வ&தி) துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு3) துறை, சென்னை–9. (2 நகல்கள்) (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
உதவி நிரளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

18/7/18
பிரிவு அலுவலர்
18/7/18.